**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**MCOP. No. 36/2023**

**2024 ம் வருடம் செப்டம்பர் மாதம் 9 ம் நாள் திங்கட்கிழமை**

எ.ம.சா.1 சாட்சியின் வாக்குமூலம் பிரமாணச்சட்டம் 1969, பிரிவு 6(1)ன்படி இளநிலை உதவியாளர் திரு.சி.இளங்கோவன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.

| பெயர் | **சந்திரசேகர்** | த/பெ | **முத்து** |
|---|---|---|---|
| ஊர் | | வட்டம் | |
| சாதி | | சமயம் | |
| வயது | | தொழில் | |

**முதல் விசாரணை:-**

நான் எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்தில் ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். என்னுடைய தகவலின் பேரில் தான் தயாரிக்கப்பட்டது. எனது சாட்சியத்தை ஏற்று மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை:-**

இந்த வழக்கில் இந்த விபத்து சம்மந்தமாக என் மீது தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி இந்த விபத்து சம்மந்தமாக குற்ற வழக்கு திருப்புவனம் குற்றவியல் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த விபத்தில் என் மீது தவறு இல்லை என்று காவல் துறையில் புகார் மனு கொடுத்துள்ளீர்களா என்றால் கொடுத்துள்ளேன். அந்த புகார் மனுவை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. நான் கொடுத்த புகார் மனுவின் மீது

நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் எந்த புகாரும் காவல் நிலையத்தில் என் மீது தவறு இல்லை என்று கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த விபத்திற்கு நான் காரணம் இல்லை என்று குற்றவியல் நீதிமன்றத்தில் தனிநபர் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்து சம்மந்தமாக எங்கள் நிறுவனத்தில் எனக்கு குறிப்பாணை வழங்கினார்கள். இந்த விபத்து சம்மந்தமாக என்னை பணியிடை நீக்கம் செய்யவில்லை. இந்த விபத்து சம்மந்தமாக எனக்கு ஊதிய உயர்வை நிறுத்திவைத்தார்கள். இந்த விபத்திற்கு எனது அஜாக்கிரதை கவனக்குறைவுதான் முழு காரணம் என்பதால் எங்கள் நிறுவனம் தான் மனுதாரருக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. இந்த விபத்து சமயத்தில் மனுதாரர் தலைக்கவசம் அணிந்து தனது இருசக்கர வாகனத்தை மெதுவாகவும் கவனமாகவும் ஓட்டிச்சென்றார் என்றும் எனது கவனக்குறைவால் தான் இந்த விபத்து ஏற்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை